EASTERN UNIVERSITY, SRI LANKA

FACULTY OF COMMERCE AND MANAGEMENT

EXTERNAL DEGREE PROGRAMME – 1999/2000 (APRIL/ MAY – 2006)

PART II EXAMINATION IN BUSINESS ADMINISTRATION / COMMERCE

COM 304 ADVANCED FINANCIAL ACCOUNTING - II

சகல வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

1. 2005 ம் ஆண்டுக்கான XYZ கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் பின்வருமாறு :

**31.12.2005 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு**

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| விற்பனைகள் : காசு | 280000 | |
| கடன் | 1120000 | 1400000 |
| கழி : விற்பனைக் கிரயம் | | 840000 |
| மொத்த இலாபம் | | 560000 |
| கழி : செயற்பாட்டுச் செலவுகள் | 140000 | |
| பெறுமானத் தேய்வு | 98000 | |
| நீண்டகாலக் கடன் வட்டி | 42000 | 280000 |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 280000 |
| கழி : வரி | | 140000 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | | 140000 |
| கழி : முன்னுரிமைப் பங்கிலாபம் | 17000 | |
| சாதாரண பங்கிலாபம் | 25000 | 42000 |
| ஆண்டுக்கான நிறுத்தி வைத்த இலாபம் | | 98000 |
| இலாப நட்ட கணக்கு மு. கொ. வ. | | 182000 |
| | | **280000** |

**31.12.2005 இல் உள்ளவாறான ஐந்தொகை**

| பொறுப்புக்கள் | ரூபா | சொத்துக்கள் | ரூபா |
|---|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (ரூ.10 பங்கு) | 140000 | நிலையான சொத்துக்கள் | 1050000 |
| முன்னுரிமைப் பங்கு மூலதனம் | 280000 | நன்மதிப்பு | 140000 |
| இலாப நட்டக் கணக்கு மீதி | 280000 | இருப்புக்கள் | 490000 |
| நீண்ட காலக் கடன் | 840000 | கடன்பட்டோர் | 350000 |
| கடன் கொடுத்தோர் | 280000 | காசு மீதி | 70000 |
| சென்மதி உண்டியல்கள் | 140000 | | |
| வரி சென்மதி | 100000 | | |
| செலவுகள் சென்மதி | 40000 | | |
| | **2100000** | | **2100000** |

XYZ கம்பனியின் 2003 மற்றும் 2004 ஆண்டுக்கான விகிதங்களும் அக் கம்பனி சார்ந்த வியாபாரத் துறையின் சராசரி விகிதங்களும் பின்வருமாறு :

| | 2003 | 2004 | Industry |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2.54 | 2.10 | 2.30 |
| அமிலப் பரிசோதனை விகிதம் | 1.10 | 0.96 | 1.20 |
| கடன்பட்டோர் சுழற்சி | 6.00 | 4.80 | 7.00 |
| இருப்பு சுழற்சி | 3.80 | 3.05 | 3.85 |
| மொத்த மூலதனத்திற்கு நீண்டகால கடன் | 0.38 | 0.41 | 0.4 |
| மொத்த இலாப வீதம் | 38% | 41% | 40% |
| தேறியலாப வீதம் | 18% | 16% | 15% |
| உரிமை மூலதனம் மீதான வருவாய் வீதம் | 24% | 29% | 19% |
| மொத்த சொத்துக்கள் மீதான வருவாய் வீதம் | 7% | 6.8% | 8% |
| மொத்த சொத்து சுழற்சி | 0.5 | 0.6 | 0.7 |
| வட்டிப் பாதுகாப்பு | 10 | 9 | 10 |
| பங்கு ஒன்றிற்கான உழைப்பு (ரூபா) | 9 | 8.50 | 6 |
| பங்கு ஒன்றிற்கான பங்கிலாபம் (ரூபா) | 2. | 1.5 | 1.8 |

வேண்டப்படுவது :

2005 ம் ஆண்டுக்கான கம்பனியின் விகிதங்களை கணிப்பிட்டு அதன் செயற்பாடுகளையும், நிதி நிலைமையையும் மதிப்பீடு செய்க.

(25 புள்ளிகள்)

**2. (I)** கம்பனியொன்றின் 2005 ம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து பெறப்பட்ட சில விடயங்கள் பின்வருமாறு :

இலாப நட்டக் கணக்கிலிருந்து பெறப்பட்டவை :

| | ரூபா |
|---|---|
| வரி மற்றும் வட்டி கழித்த பின் தேறிய இலாபம் | 250000 |
| பெறுமானத் தேய்வு | 20000 |
| நன்மதிப்பு பதிவழிப்பு | 5000 |
| இயந்திர விற்பனை மீதான இலாபம் | 15000 |
| வரி | 75000 |
| வட்டி | 25000 |

ஐந்தொகையிலிருந்து பெறப்பட்டவை :

| | ஆரம்ப மீதி (ரூபா) | இறுதி மீதி (ரூபா) |
|---|---|---|
| கடன்பட்டோர் | 25000 | 30000 |
| வருமதி உண்டியல்கள் | 15000 | 12000 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 5000 | 6000 |
| கடன் கொடுத்தோர் | 28000 | 32000 |
| சென்மதி உண்டியல்கள் | 10000 | 8000 |
| வரி சென்மதி | 80000 | 75000 |
| செலவுகள் சென்மதி | 4000 | 5000 |
| வட்டி சென்மதி | 5000 | 10000 |

வேண்டப்படுவது :

2005 ம் ஆண்டுக்கான கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து எழும் தேறிய காசுப் பாய்ச்சலைக் கணிக்குக.

(10 புள்ளிகள்)

(II) ABC கம்பனியின் 2005 ம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் பின்வருமாறு :

**31.12.2005 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு**

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| விற்பனைகள் | | 2040000 |
| கழி : விற்பனைக் கிரயம் | | 1360000 |
| மொத்தலாபம் | | 680000 |
| கூட்டு : முதலீட்டு வருமானம் | | 25000 |
| | | 705000 |
| கழி : செயற்பாட்டுச் செலவுகள் | 230000 | |
| பெறுமானத் தேய்வு | 110000 | |
| வட்டி | 70000 | 410000 |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 295000 |
| கழி : வரி | | 130000 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | | 165000 |
| கழி : பங்கிலாபம் | | 90000 |
| ஆண்டுக்கு நிறுத்தி வைத்த இலாபம் | | 75000 |
| இலாப நட்டக் கணக்கு மீதி மு. கொ. வ | | 425000 |
| இலாப நட்டக் கணக்கு மீதி மு. கொ. செ | | **500000** |

**31.12.2004 மற்றும் 31.12.2005 இல் உள்ளவாறான ஐந்தொகைகள்**

| பொறுப்புக்கள் | 2004 | 2005 | சொத்துக்கள் | 2004 | 2005 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| சாதாரண பங்கு மூலதனம் | 500000 | 500000 | நிலையான சொத்து | 850000 | 1000000 |
| இலாப நட்டக் கணக்கு மீதி | 425000 | 500000 | இருப்பு | 340000 | 350000 |
| நீண்டகாலக் கடன் | 500000 | 530000 | கடன்பட்டோர் | 360000 | 330000 |
| கடன் கொடுத்தோர் | 175000 | 200000 | காசு | 230000 | 250000 |
| வரி சென்மதி | 125000 | 130000 | | | |
| செலவுகள் சென்மதி | 15000 | 25000 | | | |
| பங்கிலாபம் சென்மதி | 40000 | 45000 | | | |
| | **1780000** | **1930000** | | **1780000** | **1930000** |

வேண்டப்படுவது :

ABC கம்பனியின் 2005ம் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றினை செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் எழும் காசுப் பாய்ச்சல்களை நேர் முறையில் அறிக்கையிட்டுத் தயாரிக்குக. (உங்கள் செய்கைகளையும் எடுகோள்களையும் தெளிவாகக் காட்டுக)

(15 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

3. (I) வரலாற்றுக் கிரய அடிப்படையிலமைந்த கணக்கீட்டு முறைமையின் வரையறைகளைச் சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

(II) கம்பனியொன்றின் 2005 ம் ஆண்டுக்கான வரலாற்று விற்பனைக் கிரயம் தொடர்பான தரவுகள் பின்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 145000 |
| கொள்வனவுகள் | 650000 |
| இறுதி இருப்பு | 115000 |

இருப்பில் மூன்று மாத சராசரி விற்பனைக்குரிய பொருட்கள் உள்ளன.

விலைச் சுட்டெண்கள் (மாத நடுப்பகுதியில்) பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 2004 | ஒக்டோபர் | 250 |
| | நவம்பர் | 252 |
| | டிசம்பர் | 255 |
| 2005 | ஒக்டோபர் | 300 |
| | நவம்பர் | 304 |
| | டிசம்பர் | 306 |
| 2006 | ஜனவரி | 310 |
| 2005 | க்கான சராசரி | 280 |

வேண்டப்படுவது :

நடைமுறைக் கிரயக் கணக்கீட்டு (CCA) அடிப்படையில் பின்வருவனவற்றைக் கணிக்குக.

(i) விற்பனைக் கிரயச் செம்மையாக்கம்

(ii) நடைமுறைக் கிரய ஒதுக்கத்திற்கு மாற்றப்படும் இருப்பு மீள் மதிப்பீட்டு மிகை

(iii) நடைமுறைக் கிரய ஐந்தொகையில் காட்டப்படும் இறுதியிருப்பு

(10 புள்ளிகள்)

(III) கம்பனியொன்றின் 2005 ம் ஆண்டுக்கான பணசார் தொழிற்படு மூலதன விடயங்கள் தொடர்பான வரலாற்றுக் கிரயத் தரவுகள் பின்வருமாறு :

| | ஆரம்ப மீதி (ரூபா) | இறுதி மீதி (ரூபா) |
|---|---|---|
| கடன்பட்டோர் | 250000 | 300000 |
| வருமதி உண்டியல்கள் | 150000 | 140000 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 50000 | 60000 |
| கடன் கொடுத்தோர் | 180000 | 200000 |
| சென்மதி உண்டியல்கள் | 100000 | 90000 |
| செலவுகள் சென்மதி | 40000 | 50000 |

ஒவ்வொரு விடயத்தினதும் சராசரி ஆயுட்காலம் இரண்டு மாதங்கள்.

விலைச் சுட்டெண்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| 2004 நவம்பர் | 200 |
| டிசம்பர் | 220 |
| 2005 நவம்பர் | 300 |
| டிசம்பர் | 325 |
| 2005 க்கான சராசரி | 250 |

**வேண்டப்படுவது :**

CCA முறையின் கீழ் பணசார் தொழிற்படு மூலதன செம்மையாக்கலைக் கணிக்குக.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**4. (I)** ASP முதலீட்டுக் கம்பனியானது KVS கம்பனியின் ஒவ்வொன்றும் ரூ. 100 வான 1000 15% தொகுதிக் கடன்களை 01.04.2005 இல் ரூ. 105000 கிரயத்தில் இருப்பில் வைத்திருந்தது. வட்டியானது யூன் 30 இலும் டிசம்பர் 31 இலும் ஒவ்வொரு ஆண்டும் செலுத்தப்படுகின்றது. 01.05.2005 இல் 500 தொகுதிக் கடன்கள் ரூ. 53500 வுக்கு வட்டி உட்பட்ட வில்லையில் கொள்வனவு செய்யப் பட்டன. 01.11.2005 இல் 600 தொகுதிக் கடன்கள் ரூ. 57300 க்கு வட்டி நீங்கிய விலையில் விற்பனை செய்யப்பட்டன. 30.11.2005 இல் 400 தொகுதிக் கடன்கள் ரூ. 38400 க்கு வட்டி நீங்கிய விலையில் கொள்வனவு செய்யப்பட்டன. 31.12.2005 இல் 400 தொகுதிக் கடன்கள் ரூ. 55000 க்கு வட்டியுட்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்டன.

**வேண்டப்படுவது :**

FIFO முறையைப் பயன்படுத்தி 31.12.2005 இல் முதலீட்டின் இருப்பினை கிரயத்தில் கணித்து கம்பனியின் முதலீட்டுக் கணக்கினைத் தயாரிக்குக.

**(15 புள்ளிகள்)**

**(II)** பின்வரும் தகவல்களிலிருந்து வியாபார இலாப நட்டக் கணக்கினைத் தயாரிக்குக.

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | ரூ. 9200 |
| இறுதியிருப்பு | ரூ.10000 |
| மொத்த லாப வீதம் | 36% |
| இருப்புச் சுழற்சி | 20 |
| தேறிய லாப வீதம் | 12% |
| வருமான வரிவீதம் | 40% |

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**